**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 110** **நாள்: 21.04.2026**

**சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் காவலர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் பணி சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 975 இடங்களில் உள்ள 4,085 வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள 19,604 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான கணினி குலுக்கல் சுழற்சி முறை தேர்வு (Polling Personnel Randomization) சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் முன்னிலையில் இன்று (21.04.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

முன்னதாக, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில், சென்னை மாவட்ட தேர்தல் காவல் பார்வையாளர் திரு.பி.சங்கர் ஜெயிஸ்வால், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள 1,657 காவலர்களை கணினி குலுக்கல் முறையில் (Police Personnel Randomization) தேர்வு செய்யும் பணி நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.தேம்ஜென்வாபாங் ஆவோ, இ.ஆ.ப., திரு. விக்ரம் குமார், இ.ஆ.ப., திரு. ஜி.ஸ். சஹோடா, இ.ஆ.ப., திரு. எஸ். எல். நவீன், இ.ஆ.ப., திரு. சுதிர் பாரா, இ.ஆ.ப., திரு. ரஞ்சித் குமார் சிங், இ.ஆ.ப., திருமதி நான்சி சஹாய், இ.ஆ.ப., திரு.கன்ஷியாம் தோரி, இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி), திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (பணிகள்), காவல் இணை ஆணையாளர் (தலைமையிடம்) திரு.எஸ்.மகேஷ்வரன், இ.கா.ப., கூடுதல் காவல் துணை ஆணையாளர் திரு.எம்.குமரகுருபரன் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**